**ஹப்புத்தளை பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

---

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 ஆந் திகதியன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2013 மார்ச் 25 ஆந் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 செப்டம்பர் 16 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிசார் கூற்றுக்களில் ஏற்பட்ட தாக்கங்களைத் தவிர, நிதிசார் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு அமைய தயாரிக்கப்பட்டிருந்தன என்றும் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ஹப்புத்தளை பிரதேச சபையின் நடவடிக்கைகளது நிலைமை மற்றும் முடிவுற்ற அவ்வாண்டிற்கான அதன் செயற்பாட்டினது நிதிசார் விளைவுகள் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றினது உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலையைக் காட்டுகின்றன என்பதும் எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 தேறிய சொத்துக்களில் குறைவு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறான தேறிய சொத்துக்களது பெறுமதி ரூபா 40,741,677 ஆகும். முன்னைய ஆண்டின் முடிவில் உள்ளவாறான தேறிய சொத்துக்களது பெறுமதி ரூபா 43,942,741 ஆகும். தேறிய குறைவு ரூபா 3,201,064 ஆகும்.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) முன்னைய ஆண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணமாகிய ரூபா 3,113,744 வருவாய்க் கடன்பட்டோராகக் கணக்கிலிடப்படவில்லை. ஆயினும், மீளாய்வாண்டின்போது பெறப்பட்ட மேற்படி தண்டப்பணம் திரண்ட நிதியத்தில் செலவு, வைக்கப்படாது மீளாய்வாண்டின் வருவாயாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது. ஆகவே, மீளாய்வாண்டிற்கான வருவாய் அதேயளவு தொகையால் நிதிசார் கூற்றுக்களில் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) சபைக்குச் சொந்தமான 53-5067 இலக்கமுடைய கெப் வண்டியின் பெறுமதி நிர்ணயிக்கப்பட்டுக் கணக்கிலிடப்படவில்லை.

#### 1.3.3 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களில் காட்டப்பட்ட மீளளிப்புச் செய்யப்பட வேண்டிய வைப்புக் கணக்கு மீதியை வைப்புப் பதிவேட்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 124,364 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

#### 1.3.4 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பெறவேண்டிய கணக்குகளது மீதி ரூபா 12,124,398 ஆகும். கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்குகளது மீதி ரூபா 29,870,702 ஆகும்.

**1.3.5 கணக்காய்விற்கான சான்றின்மை**

ஒப்படைப்புக் கட்டளைகள், உரித்துறுதிகள், பொருட்கணிப்புச் சபை அறிக்கைகள் என்பன இன்மையால் ரூபா 43,312,500 பெறுமதியான காணிகளையும் கட்டிடங்களையும் கணக்காய்வில் திருப்திகரமாகச் சரி, பிழை பார்க்க முடிய வில்லை.

**1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச் சட்டம் | 2013 ஆம் ஆண்டின் பொருட்டு ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு அனுப்பி வைக்கப்பட வண்டிய 11 ஊழியர்களது 3 சதவீத உதவி தொகையாக ரூபா 32,973 குறித்த நிதியத்திற்கு அனுப்பி வைக்கப்படவில்லை. |
| (ஆ) | 1985 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தால் (திருத்தம்) திருத்தப்பட்டவாறான 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச் சட்டம் | அமைய மற்றும் பிரதியீட்டு ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 8 சதவீத உதவு தொகை அறவிடப்படவில்லை. 12 சதவீத சபையின் உதவு தொகையை உள்ளடக்கிய 20 சதவீத உதவு தொகையான ரூபா 219,823 2013 ஆம் ஆண்டின்போருட்டு குறித்த நிதியத்திற்கு வழங்கப்படவில்லை. |
| (இ) | பிரதேச சபை விதிகள் 217 மற்றும் 218 (நிதியும் நிர்வாகமும்) - விதி 1988 | சபைக்குச் சொந்தாமானதும் சபை பயன்படுத்துவதுமான சகல காணிகளையும் கட்டிடங்களையும் ஆண்டிற்கு ஒருமுறை சரி, பிழை பார்ப்பதற்காக நடவடிக்கையைத் தலைவர் மேற்கொள்ளப்படவில்லை. |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குயெரசின் தாபன விதிக்கோவை அத்தியாயம் XXIV பிரிவுகள் 1:6 மற்றும் 4 | சபையால் பணியாற்றி இடமாற்றம் பெற்ற /தமது பதவிகளிலிருந்து நீங்கிய 11 ஊழியர்களிடமிருந்து பெறவேண்டிய ஊழியர் கடனாகிய ரூபா 54,562 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 6.636,694 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 13,516,493 ஆகும். இது நிதிசார் விளைவுகளில் ரூபா 6,880,249 தேறிய குறைவைக் காட்டுகின்றது.

## 2.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டவாறான மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 6,880,249 தேறிய குறைவு அவதானிக்கப்பட்டது. அதன் பகுப்பாய்வு பின்வருமாறு.

| மீண்டுவரும் வருவாய் | 2013 | 2012 | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| தீர்வையும் வரியும் | 534,262 | 586,586 | (51,964) |
| குத்தகை வாடகை | 8,048,150 | 17,979,632 | (9,931,482) |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 492,570 | 401,682 | 90,888 |
| சேவைக் கட்டணம் | 2,541,391 | 4.210,778 | (1,669,387) |
| பிடி ஆணைக் கட்டணமும் தண்டப் பணமும் | 8,613,655 | 3,231,483 | 5,382,172 |
| ஏனையவருவாய் | 322,873 | 493,033 | (160,160) |
| வருவாய்க்கான உதவி | 13,093,261 | 11.059,333 | 2,033,928 |
| **மீண்டுவரும் செலவினம்** | | | |
| சம்பளங்களும் படிகளும் | 17,284,304 | 14,577,342 | (2,706,962) |
| பயணச் செலவினம் | 549,095 | 659,718 | 110,623 |
| வழங்கலும் உபகரணமும் | 1,976,896 | 2,108,375 | 131,479 |
| மூலதனச் சொத்துப் பழுதுபார்ப்பும் பராமரிப்பும் | 1,083,012 | 1,668,794 | 585,782 |
| போக்குவரத்தும் பயன்பாட்டுச் சேவைகளும் | 2,152,928 | 2,231,112 | 78,184 |
| வட்டி, பங்கிலாபம், மிகையூதியம் கொடுப்பனவு | 766,478 | 609,787 | (156,691) |
| உதவிப் பணம், உதவு தொகை நிவாரணத் தொகை | 3,079,637 | 2,406,820 | (672,817) |
| ஓய்வூதியம், ஓய்வூதியநலன் பணிக்கொடை | 127,478 | 183,636 | 56,158 |

தேறிய குறைவு (6,880,249)

## 2.3 வருவாய் நிர்வாகம்

### 2.3.1 வருவாய்ச் சேகரிப்பின் செயலாற்றல்

மீளாய்வாண்டிற்கென அறவிடப்படவேண்டியிருந்த வருவாய் ரூபா 20,563,261 ஆகும். ஆண்டு முடிவில் உள்ளவாறான நிலுவை ரூபா 5,723,661 ஆகும். இது பட்டியலிடப்பட்ட வருவாயின் 27 சதவீதமாகும்.

### 2.3.2 தீர்வையும் வரியும்

தீர்வை அறவிடப்படக்கூடிய சபையின் பிரதேசத்துக்குட்பட்ட சொத்தக்கள் 2004 ஆம் ஆண்டின் பின்னர் மதிப்பீடு செய்யப்படவில்லை.

### 2.3.3 குத்தகை வாடகை

1980 டிசெம்பர் 31 ஆந் திகதிய 1980/46 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரது சுற்றறிக்கைப் பிரகாரம் சபைக்குச் சொந்தமான 39 கடைகளது மாதாந்த வாடகை மதிப்பிடப்படவில்லை.

### 2.3.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

முன்னைய ஆண்டு முடிவில் இருந்த வர்த்தக அனுமதிப்பத்திர நிலுவை ரூபா 52,525 ஆகும். இதில் ரூபா 1,450 மாத்திரமே ஆண்டு முடிவுவரை அறவிடப்பட்டிருந்தது. அறவீட்டின் சதவீதம் 2.7 சதவீதமாகும்.

### 2.3.5 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபையின் தலைமைச் செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்படவேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | ரூபா |
|---|---|
| நீதிமன்றத் தண்டப்பணம் | 3,658,109 |
| முத்திரைக் கட்டணம் | 1,463,790 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

சபையின் பிரதேசத்துக்குட்பட 8 தொலைத் தொடர்புக் கோபுரங்கள் நிறுவப்பட்டிருந்தும் தொலைத்தொடர்புக் கோபுரப் பராமரிப்பிற்கான கட்டணத்தை அறவிடுவதற்கான உப விதிகளைத் தயாரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 3.2 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

சபைக்குச் சொந்தமான 2 மிட்சுபிசி கெப் வண்டிகளும் ஒரு கைடிறக்டரும் பழுதுபார்த்து பயன்படுத்துவதற்கோ அல்லது முறையாகக் கைதவிர்ப்புச் செய்யப்படுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்படாது சபை வளாகத்தில் இருந்தன.

## 4. கணக்களி தகைமையும் நல்லாளுகையும்

### வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கென சபை தயாரித்த வரவு, செலவுத் திட்டத்திற்கும் உண்மையான தரவுகளுக்குமிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. வரவு, செலவுத் திட்டம் ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படவில்லை.

| மீண்டுவரும் வருவாய் | வரவு, செலவுத் திட்டமிடப்பட்டது | உள்ளவாறானது | வேறுபாடு | வேறுபாட்டுச் சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| தீர்வையும் வரியும் | 633,500 | 534,622 | 98,878 | 15.6 |
| வாடகை | 3,941,700 | 8,048,150 | 4,106.450 | 104.1 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 472,300 | 492,570 | 20,270 | 4.2 |
| சேவைக் கட்டணம் | 3,396,000 | 2,541.391 | 854,609 | 25.1 |
| பிடிஆணைக் கட்டணமும் தண்டப் பணமும் | 6,038,000 | 8,613,655 | 2,575,655 | 42.6 |
| ஏனைய வருவாய் | 400,600 | 332,873 | 67,727 | 16.9 |
| வருவாய்க்கான உதவி | 13.237,550 | 13,093,261 | 144.289 | 1.0 |
| மூலதன உதவி | 3,500,000 | 10,103,563 | 6,603.563 | 188.6 |

**மீண்டுவருஞ் செலவினம்**

| | | | | |
|---|---|---|---|---|
| சம்பளமும் படியும் | 15,951,570 | 17,284,304 | 1,332,734 | 8.3 |
| பயணச் செலவினம் | 705,000 | 549,094 | 155,906 | 22.1 |
| வழங்கலும் உபகரணங்களும் | 1,911,500 | 1,976,895 | 65,395 | 3.4 |
| மூலதனச் சொத்துப் பழுதுபார்ப்பும் பராமரிப்பும் | 1,428,000 | 1,083,012 | 344,988 | 24.1 |
| போக்குவரத்தும் பாவனைச் சேவைகளும் | 1,822,500 | 2,152,928 | 330,428 | 18.1 |
| வட்டி, பங்கிலாபம், மிகையூதியக் கொடுப்பனவு | 970,000 | 766,478 | 203,522 | 20.3 |
| உதவிப் பணம், உதவு தொகை மற்றும் நிவாரணத் தொகை | 80,000 | 3,079,637 | 2,999,637 | 3,749.5 |
| ஓய்வூதியம், ஓய்வூதிய நலன் மற்றும் பணிக் கொடை | 275,000 | 127,478 | 147,522 | 53.6 |
| மூலதனச் செலவினம் | 6,950,000 | 24,034,579 | 17,084,579 | 245.8 |

## 5 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு
(ஆ) வருவாய் நிர்வாகம்